சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.18/2022

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ம் நாள் பி.வா..சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடாச்சலம் | வயது | 71 |
| த/பெ | கோவிந்தப்பன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிறுமுகை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஒர்க்ஷாப் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எனது தகப்பனார் கோவிந்தப்ப கவுடர் இறக்கும் வரை எனக்கும் அவருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. சிறுமுகை வ.உசி நகரில் இருக்கும் வீடு 35 ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டது என்றால் 1989 ல் கட்டப்பட்டது. நான் அந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரி தான். என் தாயார் நஞ்சம்மாளுக்கு உடல்நிலை சரியில்லாத போது எனது தம்பி சதாசிவம் தான் உடன் இருந்து பார்த்து பராமரித்து வந்தார் என்றால் சரி யல்ல. நான் தான் பராமரித்து வந்தேன். எனது தாயார் இறந்த துக்கம் தாங்காமல் எனது தம்பி சதாசிவமும் 2-1/2 மாதங்களில் இறந்து விட்டார் என்றால் 2-1/2 மாதங்களில் இறந்து விட்டார். துக்கம் தாங்காமல் அல்ல. வாதிகள் தான் தாவா சொத்தை பராமரித்து வருகிறார்கள் என்றால் சரி யல்ல. நாங்கள் அனைவரும் ஒன்றாக இருந்ததால் சதாசிவம் இறந்த பின்னர் சொத்து சம்மந்தப்பட்ட ஆவண ங்கள் என் கை வசம்உள்ளது என்றால் 2001 ல் இருந்தே என் கை வசம் உள்ளது. நஞ்சுண்ட கவுடர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தகப்பனார் வழி தாத்தா ஆவார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/-G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.